[10th August 1965

திரு. கரு சீமைச்சாமி : ஹார்வி மில் மானேஜ்மென்டார் அங்குள்ள தொழிலாளர்களை அதிக நேரம் வேலை செய்யவேண்டு மென்று சொன்னதின் காரணமாக அவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள் என்பது குறித்து கனம் அமைச்சர் அவர்களுக்கு ஏதேனும் தகவல் வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் என்னிடம் தகவல் இல்லை.

திரு. வை. சங்கரன் : ஞாயிற்றுக் கிழமைகளில் லீவ் இருந்ததை மாற்றி வாரத்திலே வேறு வேறு நாட்கள் லீவ் விடுவதனால் நடைமுறையில் கஷ்டங்கள் வருகின்றன என்று இது விஷயமாக தொழிலாளர்களிடமிருந்து ஏதேனும் மனு வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஞாயிற்றுக் கிழமைக்குப் பதிலாக வேறு வேறு நாட்களில் விடுமுறை விடுவது பாக்டரி சட்டப்படி முரண்பாடானது அல்ல. ஆகையால், அதை தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டது.

பீடி தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவ மனைகள்

* 158 கேள்வி.—திரு. ஆர். அப்துல் கலீல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நாளொன்றுக்கு 20 லட்சம் பீடிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கென இலவச மருத்துவ மனைகள் நடத்த வேண்டும் என உத்தரவிடும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

சிறப்புப் பாடமாக ஹிந்தி படிக்கும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம்

* 159 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழக அரசாங்கத்தின் கீழ் உள்ள கல்லூரிகளில் ஹிந்தி மொழியை சிறப்புப்பாடமாக எடுத்துக் கொண்டுள்ள மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு இம்மாநில அரசாங்கத்திற்கு உத்திரவு பிறப்பித்திருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.